DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.

CC. No. 74/2019

Prosecution witness – PW.6

| | | |
|---|---|---|
| Name | :திரு. ராஜா | Caste: |
| Father's Name | : | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

(Accused present)

28.02.2024 – 01.00 PM

சாட்சியை நிலைய முதல் நிலைக்காவலர்–2148 அவர்கள் அடையாளம் காட்டினார்.

முதல் விசாரணை

1. எனக்கு சொந்த ஊர் விருதுநகர் மாவட்டம் மறைக்குளம் கிராமம். நான் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 யைத் தெரியும். அவர் வட்டாட்சியராக இருந்து வந்தார். அவர் தான் எங்களை மீட்டவர். ஆஜர் எதிரியைத் தெரியும். அவர்தான் நாங்கள் கல் அருக்கும் வேலை செய்த அச்சங்குளத்தில் உள்ள சுகன்யா சேம்பரின் உரிமையாளர்.

2. எங்கள் ஊரில் கடந்த 2012ம் ஆண்டு செங்கல் சேம்பருக்கு வேலைக்கு வந்தோம். எங்கள் ஊரைச் சேர்ந்த 10 குடும்பங்கள் கணவன் மனைவி மற்றும் பிள்ளைகளுடன் வேலைக்கு வந்தோம். அச்சமயத்தில் ஊரில் மழை பெய்யாததால் விவசாயம் இல்லை. எங்களை கார்த்தி என்பவர் அழைத்து வந்தார்.

3. சுமார் 6 மாதங்கள் வேலை பார்த்தோம். தங்குவதற்கு சேம்பரில் இடம் கொடுத்தார்கள். நாங்கள் சம்பளத்தில் காய்கறி வாங்கிச் சமைத்து சாப்பிட்டு வந்தோம். வாரம் ஒரு முறை சனிக்கிழமையன்று சம்பளம் தருவார்கள்.

4. வாரத்திற்கு ரூ.2000/–முதல் ரூ.3000/–வரை சம்பளத்திற்கு வேலை செய்வோம். சம்பளத்தில் மூன்றில் 1 பங்கை எங்களுக்கு கொடுப்பார்கள். மீதி பணத்தை அட்வான்ஸ் தொகையில் கழித்துவிடுவார்கள்.

5. எங்களுக்கு ரூ.40,000/– அட்வான்ஸ் தொகையாகக் கொடுத்தார்கள். நாங்கள் தினமும் நள்ளிரவு 01.00 மணியிலிருந்து மதியம் வரை வேலை செய்வோம். ஊரில் நல்லது கெட்டது எதுவும் நடந்தால் மனைவி மட்டுமே செல்லமுடியும். நாங்கள் செல்லமுடியாது.

6. சேம்பர் உரிமையாளர் கம்பால் எங்களை ஏன் சரியாக வேலை செய்யவில்லை என்று மிரட்டுவார். அரசு அதிகாரிக்கு தெரிந்து எங்களை மீட்டுச் சென்றார்கள். போலீசார் எங்களை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

(எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரிலிருந்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. சாட்சிகளின் விசாரணையை ஒத்திவைக்க மனுத்தாக்கல் செய்யப்பட்டு மனு தள்ளுபடி செய்யப்பட்டது)

(S/d. ஜெ. சங்கீதா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.